


# சிறுமலர்




## புனித குழந்தை தெரசாள் ஆலயம்

**கிராப்பட்டி, திருச்சி-6200012**

# அன்பின் மடல்...

அன்பிற்கினியவர்களே!

நெற்றியில் சாம்பல் பூசி மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் என்ற அழைப்புக்கு ஆமென் என பதில் மொழி கூறி ஆண்டவர் இயேசுவின் பாடுகளை ஆழமாக தியானிக்கவும் பிறரன்பு செயல்களால் அக்கடவுளின் அன்பை அடுத்தவருக்கு அள்ளிக் கொடுக்கவும் தனி ஜெபத்திலும் பக்தி முயற்சிகளிலும் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபடவும் வெளி அடையாளங்களைவிட உள்ளார்ந்த மாற்றத்தை எதிர்நோக்கும் காலமாம் இத்தவக்காலத்தில் இறைவனின் அருளையும் பேரிரக்கத்தையும் நிறைவாக பெற உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

தவக்காலத்தின் உச்சமாகிய புனித வாரத்தை எதிர்நோக்கி இருக்கும் நாம் இயேசுவின் பாடுகளுக்கும் அவர் சிந்திய இரத்தத் துளிகளுக்கும் உயிர் தியாகத்திற்கும் சிலுவை மரணத்திற்கும் கொடுக்கப் போகும் பதில் மொழி என்ன? ஏதோ 2000 ஆண்டுகளுக்கு முன்பாக நடந்தேறிய செயலின் நினைவு கூறல் என்று புனித வார திருச்சடங்குகளில் பங்கேற்று கடந்து போகப்

போகிறோமா? அல்லது நம்முடைய பாவங்களாலும் மனிதநேயமற்ற செயல்களாலும் பேச்சுகளாலும் இன்றளவும் இயேசுவின் பாடுகள் தொடர்கிறது என்பதை உணர்ந்து நம் வாழ்க்கை முறையை மாற்றியமைக்க போகிறேமா? உண்மையில் இத்தவக்காலம் ஒரு மாபெரும் சவால்.

ஆண்டவரின் திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு தொடங்கி உலகின் பாவங்களுக்காக தன் இன்னுயிரை தந்த இயேசுவின் பாடுகளின் புனித வெள்ளி வரை நடைபெறும் அத்துணை ஆழமிக்க அர்த்தமுள்ள திருநிகழ்வுகளில் அதீத ஈடுபாட்டோடும் மன உருக்கத்தோடும் துன்புறும் இயேசுவோடு உடனிருக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

புனித வாரத்தில் இயேசு ஆண்டவர் தமது பாஸ்கா மறைநிகழ்வை நிறைவு செய்ய எருசலேமுக்குள் நுழைந்ததை நினைவு கூறும் ஆண்டவரின் திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு அன்று இயேசுவோடு இணைந்து நாமும் பாடுகளில் பங்கேற்க பவனியில் செல்வோம். ஆண்டவரின் இராவுணவு திருப்பலியில் அர்த்தத்தோடு பங்கேற்று திருமுழுக்கின் வழியாக நாம் பெற்றுக் கொண்ட குருத்துவத்தை புதுப்பித்துக் கொள்வோம். பணிக்குருத்துவ

நிலையினரின் பணி வாழ்வு சிறக்க இறைவனிடம் இறையருள் வேண்டுவோம். ஆண்டவரின் பாடுகளின் புனித வெள்ளியில் உருக்கமான மனதோடு இயேசுவின் வேதனைகளை உணர்ந்து கொள்வோம். இயேசுவோடு சிலுவை பாதையில் நடக்க முயல்வோம்.

பாவம் எனும் விஷம் கடவுளையே பலி கேட்கும் அளவுக்கு வீரியம் நிறைந்தது என்பதை உணர்ந்து பாவக் கறைகளை இயேசுவின் இரத்தத்தால் கழுவிப் போக்குவோம். ஆண்டவரின் உயிர்ப்பு நாளில் அல்லேலூயா கீதம் பாடி பரிசுத்த உள்ளத்தோடு பங்கேற்று உயிர்ப்பை கொண்டாடுவோம்.

இந்த தவக்காலத்தில் நீங்கள் செய்துவரும் பக்தி முயற்சிகளையும் பேரன்பு செயல்களையும் மனதார பாராட்டுகிறேன். எதிர்வரும் புனித வார திருநிகழ்வுகளில் பங்கேற்று இயேசுவின் பாடுகளை தியானிக்க அன்போடு அழைக்கிறேன்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

அன்புடன்
அருள்பணி. விக்டர் இம்மானுவேல்
பங்குத்தந்தை & மறைவட்ட அதிபர்

## பங்கில் உள்ள சபைகள் மற்றும் இயக்கங்கள்

1. மரியாயின் சேனை
2. திருக்குடும்ப சபை
3. புனித வின்சென்ட் தே பவுல் சபை
4. பெண்கள் பணிக்குழு
5. புனித தெரசாள் இளையோர் இயக்கம்
6. மாதா சபை இளம் பெண்கள் இயக்கம்
7. மரிய பம்பினா சிறுமியர் குழு
8. புனித தோம்னிக் சாவியோ சிறுவர் குழு
9. திரு வழிபாட்டு குழு
10. கலைக் குழு
11. பங்குப் பேரவை
12. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் அன்பிய மண்டலங்கள்
13. அலங்கார குழு
14. பீடப்பூக்கள்

## பங்கில் உள்ள நிறுவனங்கள்

1. புனித அன்னாள் சபை தலைமையகம் (Generalate)
2. புனித அன்னாள் சபை (Provincialate)
3. புனித அன்னாள் சபை (Noviciate)
4. புனித அன்னாள் சபை (Pre Noviciate)

5. சிறுமலர் தொடக்கப்பள்ளி, மேல்நிலைப் பள்ளி, ஆங்கிலப் பள்ளி
6. FMM Sisters (புனித தோமையர் கருணை இல்லம்)
7. SCN Sisters (Mentally Retorted School)
8. ICM Sisters Provincialate
9. Carmel Ashram

## பங்கில் பணியாற்றிய பங்குத்தந்தையர்கள்

1. அருள்பணி. லூ.இருதயராஜ் (1976-1982)
2. அருள்பணி. லூ.வியாகுலம் (1982-1983)
3. அருள்பணி. ஏ.செல்வராஜ் (1983-1984)
4. அருள்பணி. பைட்டோன் ராஜ் (1984 மூன்று மாதங்கள்)
5. அருள்பணி. பு.கு.ஆரோக்கிய சாமி (1884-1991)
6. அருள்பணி. லூ.யு.லூர்ஸ் (1991 இரண்டு மாதங்கள்)
7. அருள்பணி. அருள்தாஸ் (1991 டிசம்பர் -1992 ஜூன் வரை)
8. அருள்பணி. பைட்டோன்ராஜ் (1992-1993)
9. அருள்பணி. சு.அத்தனாஸ் (1993-1999)
10. அருள்பணி. ஐ.அமலநாதன் (1999-2003)
11. அருள்பணி. ஆஞானாதிக்கம் (2003-2008)
12. அருள்பணி. ஞ.அம்புரோஸ் (2008-2011)
13. அருள்பணி. மரியானூஸ் ஐசக் (2011-2012)
14. அருள்பணி. ஞ.தேவராஜ் (2012-2013)
15. அருள்பணி. னு.தாமஸ் (2013-2018)

16. அருள்பணி. ஜோ.ஜோ.லாரன்ஸ் (2018-2023)
17. அருள்பணி. ஜோ.விக்டர் இம்மானுவேல் (2023 முதல்)

**பங்கில் பணியாற்றிய உதவி பங்குத்தந்தையர்கள்:**

1. அருள்பணி. பெலிக்ஸ் (2009-2010)
2. அருள்பணி. நெப்போலியன்
3. அருள்பணி. சகாயராஜ் (2022-2023)
4. அருள்பணி. பிரகாஸ் (2024-2025)
5. அருள்பணி. ஜார்ஜ் ஜெனோ (2025…)

# ஆலய நிகழ்வுகள்

## ஜீன் மாதம்

- ஜுன் மாதம் இயேசுவின் திருஇருதய மாதம். புங்கில் உள்ள இல்லங்களில் திருஇருதய படம் நிறுவப்பட்டு மந்திரிக்கப்பட்டது.
- 05-07-2025 மாதத்தின் முதல் சனிக்கிழமை. அன்று குழந்தை மாதாவின் 300 வது நவநாள். மாலை 06.00 மணிக்கு சிறிய தேர் பவனியும் தொடர்ந்து சிறப்பு திருப்பலியும் நடைபெற்றது.
- இந்த ஆண்டு நற்கருணை பவனிவிழா ஜுலை மாதம் 6ஆம் தேதி மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாலை 06.00 மணிக்கு திருப்பலியும் நற்கருணை பவனியும், ஆசிரும் வழங்கப்பட்டது. ஏராளமான இறைமக்கள் பங்கேற்றனர்.

- புனித சந்தியாகப்பர் ஆலய 8-ம் ஆண்டு திருவிழா ஜூலை மாதம் 18ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி 20ஆம் தேதி ஆடம்பர திருப்பலியுடன் நிறைவடைந்து.
- புனித இஞ்ஞாசியார் ஆலயத்தின் 95 ஆம் ஆண்டு திருவிழா ஜூலை மாதம் 25ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 6:30 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கி, ஆகஸ்ட் மாதம் 2ம் தேதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலியும் மாலை 6:30 மணிக்கு புனிதரின் தேர் பவனியும் நடைபெறும்.
- புனித வின்சென்ட்-தே-பவுல் சபை மற்றும் புனித குழந்தை தெரசாள் ஆலயம் சார்பாக கல்வி ஊக்கத்தொகையானது 67 பேருக்கு 13.07.2025ம் தேதி வழங்கப்பட்டது.
- 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மற்றும் அதற்கு மேல் படித்த நமது கிராப்பட்டி மறைவட்ட பங்குத்தளங்களில் உள்ள இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களுக்கு தமிழக அரசு நடத்துகின்ற TNPSC போட்டி தேர்வுகளுக்கு மாணவர்களை தயாரிக்க புனித தொன்போஸ்கோ வழிகாட்டுதல் குழுவினரால் நடத்தப்படும் விளக்க கூட்டம் வருகின்ற 17-08-2025 ஞாயிறு காலை 10:00 மணி அளவில் கிராப்பட்டி புனித குழந்தை தெரசாள் மக்கள் மன்றத்தில் நடைபெற்றது.
- 15-08-2025 புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா. அன்று காலை 06:30 மணிக்கும் மாலை 06:00 மணிக்கும் திருப்பலி நடைபெற்றது.

- 24-08-2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 04.00 மணிக்கு பங்கு பேரவை உறுப்பினர்களுக்கான கூட்டம் நடைபெற்றது.
- தமிழக ஆயர்பேரவையின் முடிவின்படி திருப்பலிக்கான காணிக்கை ரூபாய் 100- லிருந்து ரூபாய் 150 ஆக முடிவு செய்யப்பட்டு செப்டம்பர் 1-ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.
- நமது பாதுகாவலியின் 91 வது ஆண்டு திருவிழா 26-09-2025 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கி, 05-10-2025 ஞாயிற்றுக்கிழமை திருவிழா திருப்பலியுடன் நிறைவுபெற்றது. திருவிழா நாட்களில் காலைத்திருப்பலி நடைபெறவில்லை.
- இந்த ஆண்டு திருவிழா வரி ரூபாய் 200 மற்றும் திருவிழா திருப்பலிக்கான காணிக்கை ரூபாய் 200.
- திருவிழா தயாரிப்புக்கான ஒரு நாள் தியானம் 21-09-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்குத் தொடங்கி மாலை 04.00 மணிக்கு திருப்பலியுடன் நிறைவுபெற்றது.
- 12-10-2025 ஞாயிறு மாலை 3:30 மணிக்கு பங்குப்பேரவை கூட்டம் நடைபெற்றது.
- இந்த ஆண்டு விவிலிய ஞாயிறானது **விவிலியம் பற்றி அறிவோம்** என்ற மைய சிந்தனையில் கருத்தரங்கமாக 25-10-2025 (சனிக்கிழமை) மற்றும் 26-10-2025 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது. அருள்பணி யேசு கருணாநிதி வழிநடத்தினார். விவிலிய கருத்தரங்கம் 25-10-2025 அன்று மாலை 6.00 மணிக்கு திருப்பலியோடு தொடங்கி, மாலை 7:00 மணி முதல்

8:00 மணி வரையும் மற்றும் 26-10-2025 காலை 10:00 மணி முதல் பிற்பகல் 1:00 மணி வரையும் நடைபெற்றது.

- மறைபரப்பு ஞாயிறு கொண்டாட்டமானது 16-11-2025 அன்று காலை 10.00 மணி முதல் உணவு திருவிழா மற்றும் விளையாட்டு போட்டிகளோடு தொடங்கி கோலாகலமாக நடைபெற்றது. அன்பியங்கள் சார்பாக கடைகள் அல்லது உணவுக்கூடம் அமைக்கப்பட்டது. மாலைத்திருப்பலி முடிந்தவுடன் பரிசு குழுக்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டு, பொருட்கள் ஏலம் விடப்பட்டது.
- 04-11-2025 செவ்வாய் மாலை 6:30 மணிக்கு யோவான் மண்டல அன்பியங்கள் சார்பாக இறந்த நம்பிக்கையாளர்களுக்கான திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.
- 05-11-2025 புதன் மாலை 6:30 மணிக்கு மத்தேயு மண்டலம் சார்பாக இறந்த நம்பிக்கையாளர்களுக்கான திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.
- 11-11-2025 செவ்வாய் மாலை 6:30 மணிக்கு மாற்கு மண்டல அன்பியங்கள் சார்பாக இறந்த நம்பிக்கையாளர்களுக்கான திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.
- 12-11-2025 புதன் மாலை 6:30 மணிக்கு லூக்கா மண்டலம் சார்பாக இறந்த நம்பிக்கையாளர்களுக்கான திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.
- 23-11-2025 ஞாயிற்றுக்கிழமை மாலைத் திருப்பலிக்கு பின் பங்குப்பேரவை, அன்பிய பொறுப்பாளர்கள், மண்டல

பொறுப்பாளர்கள், மண்டல பொறுப்பு அருள் சகோதரிகளுக்கான கூட்டம் நடைபெறும்.

- 14-12-2025 ஞாயிறு மாலை கிள்ளுக்கோட்டை பங்கின் கிளைப்பங்கான செங்களூர் கிராமத்தில் கிறிஸ்து பிறப்பு நற்செய்தி அறிவிப்பு விழாவை அந்த இறை சமூகத்தோடு கொண்டாடினோம். அருள்பணி இம்மானுவேல் தாசன், பேராசிரியர் புனித பவுல் இறையியல் கல்லூரி, சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார். அங்குள்ள மக்களுக்கு புதிய உடைகள் வழங்கி, இரவு உணவை அவர்களுடன் உண்டு இல்லம் திரும்பினோம்.

## இந்த ஆண்டுக்கான கிறிஸ்துமஸ் கேரல்ஸ் அட்டவணை:

| நாள் | அன்பியம் - குழு 1 | அன்பியம் - குழு 2 |
|---|---|---|
| **04.12.2025 வியாழன்** | புனித அன்னை வேளாங்கண்ணி அன்பியம் புனித அந்தோணியார் அன்பியம் | புனித சவேரியார் அன்பியம் |
| **05.12.2025 வெள்ளி** | புனித இஞ்ஞாசியார் அன்பியம் | புனித லூர்து அன்னை அன்பியம் |
| **09.12.2025 செவ்வாய்** | புனித அவிலா தெரசா அன்பியம் | புனித அவிலா தெரசா அன்பியம் |

| | | |
|---|---|---|
| **10.12.2025 புதன்** | புனித ஆரோக்கிய அன்னை அன்பியம்<br>புனித அமலோற்பவ அன்னை அன்பியம்<br>FMM – Mercy Home | புனித தேவசகாயம் அன்பியம் |
| **11.12.2025 வியாழன்** | புனித அசிசி அன்பியம்<br>புனித யாகப்பர் அன்பியம் | புனித அருளானந்தர் அன்பியம் |
| **12.12.2025 வெள்ளி** | புனித அன்னாள் அன்பியம் | புனித அன்னாள் அன்பியம்<br>St.Anne's Generalete Campus |
| **16.12.2025 செவ்வாய்** | புனித கார்மெல் அன்பியம்<br>புனித மரிய பம்பினா அன்பியம்<br>Carmel Ashram | புனித பவுல் அன்பியம்<br>St.Anne's Provincialate |
| **17.12.2025 புதன்** | புனித அன்னை தெரசா அன்பியம் புனித பாத்திமா அன்னை அன்பியம்<br>ICM Convent | புனித சூசையப்பர் அன்பியம்<br>திரு இருதய அன்பியம்<br>SCN Convent |
| **18.12.2025 வியாழன்** | குழந்தை இயேசு அன்பியம் | புனித சிறுமலர் தெரசா அன்பியம்<br>புனித தோமையார் அன்பியம் |

## SANTA 2025 நிகழ்வு

- 20-12-2025 சனிக்கிழமை அன்று நமது மறைக்கல்வி மாணவர்களால் நடத்தப்பட உள்ளது.
- 21-12-2015 ஞாயிறு கிறிஸ்துமஸ் தயாரிப்பு ஒரு நாள் தியானம் காலை 10.00 மணிக்கு தொடங்கி மாலை 4.00 மணிக்கு திருப்பலியுடன் நிறைவுபெறும். கலந்து கொள்பவர்களுக்கு உணவு ஏற்பாடு செய்யப்பட்டது.
- 22-12-2025 திங்கட்கிழமை பங்கு சார்பாக முதியோர்களுக்கான கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் நடைபெற உள்ளது.
- 25-12-2025 வியாழக்கிழமை காலை 7:30 மணிக்கு கிறிஸ்து பிறப்பு பெருவிழா சிறப்பு திருப்பலி நடைபெற்றது. அன்று மாலை 6:30 மணிக்கு நற்கருணை ஆசீர் நடைபெற்றது.
- 26-12-2025 முதல் 30-12-2025 வரை வார நாட்களில் காலை திருப்பலி நடைபெறவில்லை. மாலையில் மட்டும் திருப்பலி நடைபெற்றது.
- 26-12-2025 வெள்ளிக்கிழமை மாலை திருப்பலிக்கு பின்னர், அன்பிய மண்டலங்களுக்கிடையே கிறிஸ்துமஸ் கேரல்ஸ் போட்டி நடைபெற்றது.
- 27-12-2025 சனிக்கிழமை மாலைத் திருப்பலி, பங்கில் திருக்குடும்ப விழாவாக கொண்டாடப்பட்டது. அன்று மாலைத் திருப்பலிக்கு பின்னர் அன்பின் உறவு விருந்து மிகச்சிறப்பாக

நடைபெற்றது. பங்கு மக்கள் அதிக திருக்குடும்ப விழாவிலும் அன்பின் விருந்திலும் கலந்து கொள்ளவும்.

- 29-12-2025 திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் குடில் போட்டி நடைபெற்றது. ஏறக்குறைய 40 பேர் குடில் போட்டியில் பங்கேற்றனர்.
- அன்று மாலை 6.00 மணி திருப்பலிக்கு பின் மாசில்லா குழந்தைகள் விழாவானது, வயது அடிப்படையில் 0-5, 6-10, 11-20, 21-40 மற்றும் 41-அதற்கு மேல் என 5 பிரிவுகளில் மாறுவேட போட்டியானது சிறப்பாக நடைபெற்றது.
- 01-01-2026 காலை 07:30 மணிக்கு புத்தாண்டு திருப்பலியும் மாலை 6:30 மணிக்கு நற்கருணை வழிபாடும் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நடந்து முடிந்த அனைத்து போட்டிகளுக்கும் பரிசளிப்பு விழா நடைபெற்றது.
- 02-01-2026 முதல் வெள்ளி, அன்று மாலை 3.00 மணிக்கு இறையிரக்க ஜெபமாலையும் மாலை 6:30 மணிக்கு ஒப்புரவு வழிபாடும் தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது.
- 15-01-2026 வியாழன் மாலை 06:00 மணிக்கு பொங்கல் விழா மற்றும் பொதுநிலையினர் விழா சிறப்பு திருப்பலி தமிழர் மரபு படி நடைபெற்றது. திருப்பலிக்கு பின்னர் பொங்கல் விழா மற்றும் சிறப்பு கிராமிய கலை நிகழ்ச்சி நடைபெற்றது.
- பொங்கல் திருநாளை முன்னிட்டு அன்று பிற்பகல் 02:00 மணிக்கு அன்பிங்களுக்கான கோலப்போட்டியும், அதனைத் தொடர்ந்து கயிறு இழுத்தல் போட்டியும் மற்றும் லக்கி

காரனர் விளையாட்டுகள் நடைபெற்றது. புங்குமக்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

- பங்கு பேரவைக்கூட்டம் 01-02-2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 3:30 மணிக்கு மக்கள் மன்றத்தில் நடைபெற்றது.
- புனித லூர்து மாதா பெருவிழா 11-02-2026 புதன்கிழமை மாலை 6:00 மணிக்கு அன்னையின் தேர்பவனி, ஜெபமாலையும், அதனைத் தொடர்ந்து கெபியில் திருப்பலியும் நடைபெற்றது.
- 18-02-2026 திருநீற்று புதன். அன்று காலை 6.00 மணிக்கும் மாலை 6.00 மணிக்கும் திருப்பலி நடைபெற்றது.
- 20-02-2026 வெள்ளிக்கிழமை தவக்காலத்தில் முதல் வெள்ளி. அன்று மாலை 6.00 மணிக்கு சிலுவைப்பாதையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது. தவக்காலத்தில் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் காலைத்திருப்பலி நடைபெறவில்லை. அன்று மாலை சிலுவை பாதையை வழி நடத்துபவர்கள் புனித மத்தேயு மண்டலத்தை சார்ந்த அன்பியங்கள்.
- கம்யூனியோ ஞாயிறு 22-02-2026 ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது.
- 27-02-2026 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு சிலுவைப்பாதையும் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும். அன்றைய நிகழ்வை மாற்கு மண்டலத்தைச் சார்ந்த அன்பியங்கள் சிறப்பித்தனர்.

- இந்த கல்வியாண்டிற்கான மறைக்கல்வி ஆண்டுவிழா 28-02-2026 சனிக்கிழமை மாலை திருப்பலியைத் தொடர்ந்து, நமது குழந்தை தெரசா மக்கள் மன்றத்தில் நடைபெற்றது.
- தவக்கால திருப்பயணமாக மார்ச் மாதம் 14ஆம் தேதி சனிக்கிழமை கோனாங்குப்பம் மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள 7 ஆலயங்களுக்கு சென்றோம்.
- 06-03-2026 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு சிலுவைப்பாதையும் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும். அன்றைய நிகழ்வை லூக்கா மண்டலத்தைச் சார்ந்த அன்பியங்கள் சிறப்பித்தனர்.
- 13-03-2026 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு சிலுவைப்பாதையும் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும். அன்றைய நிகழ்வை யோவான் மண்டலத்தைச் சார்ந்த அன்பியங்கள் சிறப்பித்தனர்.
- தவக்கால தியானம் 22-03-2026 ஞாயிறு காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிக்கு திருப்பலியுடன் நிறைவு பெற்றது. மாலை 6.00 மணி திருப்பலி நடைபெறவில்லை.
- 20-03-2026 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு சிலுவைப்பாதையும் தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது. அன்றைய வழிபாட்டை சிறப்பிப்பவர்கள் பக்த சபைகள் மற்றும் இயக்கங்கள்.
- 27-03-2026 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு எடமலைப்பட்டி புதூர் குழந்தை இயேசு ஆலயத்தில் இருந்து நமது பங்கு ஆலயம் வரை வீதியில் சிலுவைப்பாதையும்

அதனை தொடர்ந்து நமது ஆலயத்தில் திருப்பலியும் நடைபெற்றது.

- 29-03-2026 ஞாயிறு காலை 6:45 மணிக்கு மதுரை மெயின் ரோட்டில் உள்ள புனித தோமையார் கருணை இல்லத்தில் குருத்து ஞாயிறு வழிபாடுகள் ஆரம்பமானது. அங்கிருந்து குருத்துகள் மந்திரிக்கப்பட்டு பவனியாக ஆலயம் வந்தடைந்து திருப்பலி நடைபெற்றது.
- 02-04-2026 வியாழக்கிழமை மாலை 6:00 மணிக்கு ஆண்டவரின் இராவுணவுத் திருப்பலி தொடங்கியது.
- திருப்பலி முடிந்தவுடன் நற்கருணை இடமாற்று பவனியும் அலங்கரிக்கப்பட்ட பீடத்தில் நற்கருணையும் நிறுவப்பட்டது. இரவு 12:00 மணி வரை நற்கருணை ஆராதனை நடைபெற்றது.
- 03-04-2026 திருப்பாடுகளின் புனித வெள்ளி. காலை 6.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை நற்கருணை ஆராதனை நடைபெற்றது. அன்று மதியம் 2:00 மணிக்கு பழைய ஆஷா தீபம் ளுஊளுே அருள் சகோதரிகள் இல்லத்தில் இருந்து சிலுவை பாதை தொடங்கி, இயேசு பாடுபட்ட 12 நிலைகள் நமது பங்கு இளையோர்கள் மற்றும் லுஊளு மாணவர்களால் நடித்து காட்டப்பட்டு ஆலயத்தில் நிறைவு பெற்றது. அன்று மாலை 6:00 மணிக்கு புனித வெள்ளி திருச்சடங்குகள், சிலுவைப்பாதை மற்றும் தூம்பா பவனி சிறப்பாக நடைபெற்றது.

- புனித வெள்ளி அன்று காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை புனித வின்சென்ட் தெ பவுல் சபை மற்றும் புனித தெரசாள் இளையோர் இயக்கம் சார்பாக ஆலய வளாகத்தில் உள்ள மக்கள் மன்றத்தில் இரத்ததான முகாம் நடைபெற்றது.. அன்று காலை 7.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை வாசன் கண் மருத்துவமனை மற்றும் புனித தெரசாள் ஆலயம் சார்பாக இலவச கண் மருத்துவ முகாம் நடைபெற்றது.
- 04-04-2026 சனிக்கிழமை இரவு 11:15 மணிக்கு பாஸ்கா திருவிழிப்புச் சடங்குகள் ஆரம்பமானது.
- 05-04-2026 ஆண்டவரின் உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு. அன்று காலை 7:30 மணிக்கு திருப்பலியும் மாலை 6:00 மணிக்கு நற்கருணை ஆசிரும் நடைபெற்றது. காலை 9.00 மணி ஆங்கில திருப்பலி மற்றும் மாலை 6.00 மணி தமிழ் திருப்பலி நடைபெறவில்லை.

| வ.எண் | தேதி | நாள் | அருள்பணியாளர் |
|---|---|---|---|
| 1. | 18-02-2026 | திருநீற்று புதன் | பணி. டைனிசியஸ் லாரண்ஸ் |
| 2. | 20-02-2026 | முதல் வெள்ளி | பணி. ஜோசப் |
| 3. | 27-02-2026 | இரண்டாம் வெள்ளி | பணி. சேவியர் டெரன்ஸ் |
| 4. | 06-03-2026 | முன்றாம் | பணி. வில்சன் |

| | | | |
|---|---|---|---|
| | | வெள்ளி | |
| 5. | 13-03-2026 | நான்காம் வெள்ளி | பணி. பால் பிரகாஷ் |
| 6. | 20-03-2026 | ஐந்தாம் வெள்ளி | பணி.இம்மானுவேல் தாசன் |
| 7. | 22-03-2026 | தவக்கால தியானம் | பணி. ரிச்சி வின்செண்ட் |
| 7. | 27-03-2026 | ஆறாம் வெள்ளி (வீதியில் சிலுவைப்பாதை) | பணி. அன்புராஜ் |
| 8. | 28-03-2026 | ஒப்புரவு வழிபாடு | அருள்பணியாளர்கள் |
| 9. | 2,3,4-04-26 | புனித வாரம் | பணி. செபாஸ்டின் |
| 10. | 05-04-26 | உயிர்ப்பு ஞாயிறு | பணி. ஜெரி |

- இறை இரக்கத்தின் ஞாயிறை (11-04-2026) கொண்டாடப்பட்டதால், அன்று பிற்பகல் 3.00 மணிக்கு ஆலயத்தில், இறை இரக்கத்தின் ஜெபமாலையும், நற்கருணை ஆசீரும், சிறப்பாக இறைவனின் இரக்கத்தினை பெறும் வகையில் ஒப்புரவு அருள்சாதனம் வழங்கப்பட்டது.
- குட்டி ரோமாபுரி என அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் திருச்சி மறைமாவட்டத்தில் 04-11-1934 அன்று கிராப்பட்டி எனும் சிற்றூரில் குழந்தை இயேசுவின் புனித தெரசாவிற்கு ஆலயம் கட்டப்பட்டு புனிதம் செய்யப்பட்டது.

இவ்வாலயமானது திருச்சி மறை மாவட்ட தலைமை கோவிலான புனித மரியன்னை பேராலயத்தின் கிளைப்பங்காக செயல்பட்டு வந்தது. 01-11-1976ம் ஆண்டு புனித மரியன்னை பேராலயத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனி பங்காக உயர்த்தப்பட்டது. திருச்சி மறைமாவட்டத்தில் இயங்கும் 5 மறைவட்டங்களில் ஒன்றாக சிறப்பாக இயங்குகிறது.

## திருப்பலி நேர அட்டவணை

- தினந்தோறும் காலை 5.30 மணிக்கு நற்கருணை ஆசீர் மற்றும் ஜெபமாலையைத் தொடர்ந்து 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும். (சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமை தவிர)
- மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஜெபமாலையும் சிறப்பு ஒப்புரவு வழிபாடும் திருப்பலியும் நடைபெறும்.
- ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாலை 6.00 மணிக்கு ஜெபமாலையும், அதனைத்தொடர்ந்து குழந்தை இயேசுவின் புனித தெரசாவிற்கு நவநாள் திருப்பலி, நவநாள் ஜெபம், நற்கருணை ஆசிர் வழங்கப்படும்.
- (மாதத்தின் முதல் திங்களன்று குழந்தை இயேசுவின் புனித தெரசாவுக்கு சிறிய தேர் எடுத்து ஜெபமாலை ஜெபிக்கப்படும்)
- ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 6.00 மணிக்கு ஜெபமாலையும், அதனைத்தொடர்ந்து குழந்தை மாதாவிற்கு

நவநாள் திருப்பலி, நவநாள் ஜெபம், நற்கருணை ஆசிர் மற்றும் குணமளிக்கும் எண்ணெய் பூசப்படும்.

### ஞாயிற்றுக்கிழமை

- காலை 6.00 மணி - தமிழ் திருப்பலி
- காலை 7:15 மணி - தமிழ் திருப்பலி
- (காலை 8:30 மணி முதல் 9:30 மணி வரை சிறுமலர் பள்ளியில் மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறும்)
- காலை 9:00 மணி - ஆங்கில திருப்பலி
- மாலை 6:00 மணி - தமிழ் திருப்பலி

## கிளைப்பங்குகள்

### புனித இஞ்ஞாசியார் ஆலயம்

- வாரந்தோறும் வியாழக்கிழமை மாலை 6:30 மணிக்கு புனித இஞ்ஞாசியார் ஆலயத்தில் திருப்பலி நடைபெறும்.

### கொல்லாங்குளம் புனித சந்தியாகப்பர் ஆலயம்

- ஒவ்வொரு மாதத்தின் இரண்டாம் புதன்கிழமை அன்று கொல்லாங்குளம் புனித சந்தியாகப்பர் ஆலயத்தில் மாலை 6:30 மணிக்குத் திருப்பலி நடைபெறும்.
- எமது பங்கில் உள்ள சிறப்பாக தன்னலமற்று உழைக்கும் துறவியர்களை அழைத்துக் கொண்டு 14-04-2026 கோயம்புத்தூரில் உள்ள பகுதிகளுக்கு சுற்றுலா சென்றோம்.

- 24-04-2026 அன்று எமது பங்கில் சிறப்பாக செயல்படும் ஒய்.சி.எஸ் மாணவ மாணவியரை அழைத்துக் கொண்டு கோயமுத்தூர் பிளாக் தண்டர் க்கு சுற்றுலா சென்றோம்.
- 26-04-2026 எமது பங்குகள் சிறப்பாக செயல்படும் இளைஞர்கள் இளம் பெண்களை அழைத்துக் கொண்டு கேரளாவில் உள்ள வாகமானுக்கு சுற்றுலா சென்றோம்.
- 25-04-2026 அன்று மாலை நான்கு முப்பது மணிக்கு பங்கு பேரவை தேர்தலுக்கான தயாரிப்பு கூட்டமானது மறை மாவட்ட முதன்மை குரு அருள்பணி அந்துவான் மற்றும் நல்லாயன் நிலைய இயக்குனர் அருள்பணி அம்புரோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 04-05-2026 மாதத்தின் முதல் திங்களாகிய இன்று மறை மாவட்ட புதிய அருள் பணியாளர்கள் அருள்பணி கிளமெண்ட் அருள் பணி ரூபன் அருள்பணி லாரன்ஸ் திருப்பலி நிறைவேற்றி இறை ஆசிரை பெற்று தந்தனர்.
- 17-05-2026 எமது பங்கு அளவில் முதல் நற்கருணை திருப்பலி நடைபெற்றது. நான்கு குழந்தைகள் இயேசுவை முதல் முதலாக பெற்றுக் கொண்டனர்.
- 30-05-2026 மரியாவின் வணக்க மாதத்தின் நிறைவு நாள். அன்று மாலை 6.00 மணிக்கு மாதாவின் சிறிய தேர் பவனியும் திருப்பலியும் நற்கருணை ஆசிரும் வழங்கப்பட்டது.
- 31-05-2026 மாலை 3:30 மணிக்கு புதிய பங்குப்பேரவையின் முதல் அறிமுக கூட்டமும் பங்கு பேரவை பொறுப்பாளர்களை தெரிவு செய்யும் கூட்டமும் நடைபெற்றது.

